DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 328/2024 Crime No. 251/2024 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4/LW-8- முருகன் | Village | |
| Father Name | அங்கமுத்து | Taluk | |
| Age | 70 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் குறிச்சியில் குடியிருந்து கொண்டு, கோவில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரை எங்கள் ஊரில் பார்த்துள்ளேன். கோவிலுக்கும் வருவார். எதிரிக்கும், அ.சா.1 க்கும் தகராறு ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவத்திற்கு மறுநாள் காலை சுமார் 11.00 மணிக்கு, சம்பவயிடத்திற்கு வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் அப்போது சம்பவயிடத்திலிருந்து என் முன்னிலையில் செருப்பு ஒன்றினை கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**